# திறவுகோல்

2053

கார்த்திகை
மாத இதழ்



வெளியீடு:
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு.

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

*மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் அமைப்பை ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.*

*இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.*

*குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர், இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. மேலும் அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படையை சரிசெய்து கொடுத்துள்ளார்கள்.*

*நோக்கம்:*
*மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.*

*எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள...*
*பகிரி: +91 8220567322*

*இணையம்:*
*https://maintharkal.mannai.in/*

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்...

*முன்னுரை:*

*உலகில் தோன்றிய எல்லா இனமக்களும் அவரவர் தாய்மொழியில் பேசுகின்றனர். ஆனால் நாம் மட்டும் அந்த மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகிய தமிழில் பேசுகின்றோம். அது இம்மையில் நாம் பெற்ற பெரும் வரம். தமிழ் என்பது வெறும் பேச்சல்ல நம் உயிர் மூச்சு. தமிழ் உலகாண்ட மொழி. நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கம், விருந்தோம்பல், ஈகை மற்றும் உயிர்நேயத்தை உலகிற்கு கற்றுக்கொடுத்த மொழி. தமிழின் தொன்மையும், வளமான இலக்கிய இலக்கண படைப்புகளும், கலைநயமும் எந்த மொழியையும் சாராமல் தனித்தே இயங்கும் ஆற்றல் மற்றும் உயர்சிந்தனை மேவிய கருத்துக்களையும் உள்ளடக்கியதால் தான் செம்மொழி என்ற பெரும் சிறப்பைப்பெற்றது.*

*உலகின் முதல் மொழி:*

*“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி தமிழ் குடி!” என்று புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூல் தமிழின் தொன்மையை பறைசாற்றுகிறது.*

*உலகின் முதல் மாந்தன் தமிழன்! அவன் பேசிய முதல் மொழி தமிழ். 50,000 ஆண்டுகளுக்கு முந்தய பழமையான மூத்த மொழி தமிழ் என்று அமெரிக்க ஆராய்ச்சியாளர் அலெக்ஸ் கோலியர் தனது பட்டறையில் ஆய்வின் மூலம் நிறுவுகிறார். தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டம் கீழடி அகழ்வாய்வில் அண்மையில் கண்டறியப்பட்ட மண்பாண்டங்கள், தொழில்பேட்டைகள், சுடுமண் குழாய் மூலம் அமைக்கப்பட்ட கழிவறைகள் இவற்றின் முடிவுகள் கூட 2200 ஆண்டுகளுக்கு முந்தையது என்று தொல்லியல் அறிஞர்கள் உறுதிசெய்துள்ளனர்.*

*சப்பானிய மொழியியல் ஆராய்ச்சியாளர் சுஷ்முகனோ, 2500 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் எங்கள் நாட்டிற்கு வந்திருக்கிறார்கள், எங்களுக்கு உழவுத் தொழிலை கற்றுக் கொடுத்தவர்கள் அவர்கள்தான். தமிழ்மொழியிலிருந்து வேர்ச்சொற்கள், கிளைச்சொற்களை எடுத்து தான் எங்களுடைய சப்பானிய மொழியே உருவாக்கியிருக்கவேண்டும் என்று தனது ஆய்வில் நிறுவுகிறார்.*

*தமிழின் ஈர்ப்பு:*

*தமிழ் மீது தீராத காதலும்,பற்றும் கொண்டிருந்தமையால் “தமிழுக்கு அமுதென்று பேர்-அந்தத் தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்” என்று தமிழை அமுதென்றும், தம் உயிருக்கு இணையானது என்றும் பாடி பரவசமடைகிறார் பாவேந்தர் பாரதிதாசன்.*

*பன்மொழிகளை கற்றறிந்த நம் மண்ணின் மகத்தான கவிஞன் பைந்தமிழ் புலவன் பாரதி, "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று மொழியின் சிறப்பையும், அடுத்த நிலையில் தமிழ் புலவர்களை பற்றி "யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவர்போல் இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை" என்று நெகிழ்ச்சியடைகிறார்.*

*தமிழ் நாம் விருப்பப்படுவதிலோ, நம்மை ஈர்ப்பதிலோ வியப்பில்லை ஏனெனில் அது நம் தாய்மொழி. ஆனால் ஜி.யு.போப் என்ற அறிஞர், கனடாவில் பிறந்து சமயப்பணிக்காக தமிழ்நாட்டுக்கு வந்து தமிழை நன்கு கற்று அதன் சிறப்பை உணர்ந்தமையால், தான் இறந்தபின் தன் கல்லறையில் "இங்கே ஒரு தமிழ் மாணவன் உறங்கிக் கொண்டிருக்கிறான்" என்று பொறிக்கச்செய்தார்.*

*"வீறுடைய செம்மொழி தமிழ்மொழி! உலகம் வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி!" என்று தமிழ்மொழியின் தொன்மையை பறைசாற்றுகிறார் பாவலரேறு பெருஞ்சித்திரனார்.*

*தமிழின் பெருமைகள்:*
*உலகில் தோன்றிய மொழிகளிலேயே முதன்முதலாக முதல், இடை, மற்றும் கடைச்சங்கம் என்று மூன்று சங்கங்கள் வைத்து மொழிவளர்த்த தனிச்சிறப்புமிக்க ஒரே மொழி "தமிழ்" மட்டுமே. தமிழர்கள் தமிழை ஒரு மொழியாக பாராமல் இறையாக நினைத்து தமிழ்நாட்டில் காரைக்குடியில் "தமிழ்த்தாய்" எனும் பெயரில் கோவில் கட்டி இன்றும் வழிபடுகின்றனர்.*

*உலக வரலாற்றில் மானுடசமூகம் பிறந்ததும் தன் தாய்மொழியில் பெயர் சூட்டுவது இயல்பான ஒன்று. ஆனால் நம் தமிழின மக்களோ தமிழரசன், தமிழழகன், தமிழன்பன், தமிழினியாள், தமிழ்ச்செல்வி என்று தன் மொழியையே பெயராக வைத்து பெருமிதப்படுகின்றார்கள். உலகில் எந்த மொழியில் இந்த அதிசயம் உள்ளது. உலக வரலாற்றிலேயே தன் மொழிக்காக மொழிப்போர் செய்து உயிரையே ஈகம் செயத வரலாறு இந்த மண்ணில் தான்.*

*தமிழ் மொழி உயிர் எழுத்துக்கள்-12, மெய் எழுத்துக்கள்-18, உயிர்மெய் எழுத்துக்கள்-216 மற்றும் ஆயுத எழுத்து-1 என்று 4 வகையான எழுத்துக்களுடன் மொத்தம் 247 எழுத்துக்களை கொண்டது. சோழப் பேரரசின் மாமன்னன் ராசராசன், தமிழை உயிர்போல் எண்ணி தான் எழுப்பிய பெருவுடையார் கோவிலில் தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் சிவலிங்கம் 12 அடியிலும், சிவலிங்கபீடம் 18 அடியிலும், கோபுரம் 216 அடியிலும் கட்டினார். இந்தக்கோவில் 1000 ஆண்டுகளையும் கடந்தும் கம்பீரமாக இன்றும் பெருமையுடன் தமிழ்போல் உயர்ந்து நிற்கிறது. தமிழ் ஏற்றம்*

பெற்றதும் சோழர்கள் ஆட்சியில் தான்.

தமிழின் வளமை:
தமிழுக்கு "முத்தமிழ்" என்ற பெயரும் உண்டு. அவை இயல், இசை, நாடகம் என்ற மூன்று கூறுகள். அறிவிற்கு விருந்தாகும் உரைநடை நூல்களும், செய்யுள்களும் இயற்றமிழ் என்றும், செவிக்கு விருந்தாகும் மனதை மயக்கும் இசைப்பாக்களும் அந்த தேனிசையினூடே இறைவனையே கட்டிப்போடும் சுவையான பாடல்களும் அடங்கியது இசைத்தமிழ் என்றும், இயலும் இசையும் செவிக்குத்தான் இன்பம் தருமேயன்றி, கண்களுக்கு விருந்தளிக்கும் கற்றறிந்த அறிஞர்கள் முதல் கல்வியறியா பாமரர்கள் வரை நல்லறிவையும் இன்பத்தையும் புகட்டும் நாடகத்தமிழ் என்றும் உள்ள இந்தக்கூறுகள் தமிழ்மொழிக்கே உரிய சிறப்பாகும்.

தமிழ் எழுத்து, சொல், பொருள், யாப்பு, மற்றும் அணி என்ற ஐந்து இலக்கண பிரிவுகளாய் பிரிக்கப்பட்டு இவையாவும் இலக்கியங்களை அடிப்படையாக கொண்டது. தமிழுக்கே உரித்தான "ழகர" ஒலிச்சிறப்பு தமிழைத் தவிர எந்த மொழியிலும் இல்லை என்பதே தமிழின் தனிப்பெருமை.

தோண்டத்தோண்ட மணற்கேணி நீர் சுரப்பதை போல, இன்றைய நவீன உலகில் அறிமுகமாகும் தொழிநுட்பங்களின் பெயர்களை தமிழில் தேடினால் எல்லாவற்றிக்கும் வலையொளி, புலனம், முகநூல் என்று அழகான புதிது, புதிதாக இன்றளவும் இளமை குன்றாத தென்றல் வீசும் தமிழ்ச்சொற்கள் கிடைத்துக் கொண்டே இருக்கின்றன.

கிராமப்புறங்களில் உழவு செய்யும் மக்கள் களைப்பு அறியாமலிருக்க அவர்களே இயல்பாக பாடும் நாட்டுப்புறப்பாடல்கள் முதல் பிறந்த குழந்தையை மெய்மறந்து உறங்க வைக்க நாவினால் பாடும் தாலாட்டுப் பாடல், மஞ்சள் நீராட்டு, வளைகாப்பு விழாக்கள், திருமண அழைப்பு நிகழ்வுகளில் ஆசி வழங்கும் வாழ்த்துப் பாடல்கள், திருவிழா நேரங்களிலும் பாடும் கும்மிப்பாட்டு, கடைசியாக இந்த உலகை விட்டு பிரிந்த பின்பு அவர்களைப் பற்றிய நினைவுகளை பாடும் ஒப்பாரி. இந்த ஒப்பாரிப் பாடலைக் கேட்டால் கல்மனம் கூட கரைந்து விடும். இப்படி மனித இனம் உலகில் உதித்தது முதல் வாழ்வின் இறுதிப்பயணம் வரை ஒவ்வொரு தருணத்திலும் இனிமையான ராகத்துடன் கூடிய பாடல்களை வகுத்திருக்கும் மகிமை நம் தமிழ் மொழியில் மட்டுமே.

இன்றளவிலும் உலகின் பலநாடுகளிலிருந்தும் மொழியியல் ஆராய்ச்சியாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் தமிழ்மொழியை பற்றியும், தமிழ் நூல்களை பற்றியும் ஆய்வு நடத்தி வருகின்றார்கள். எண்ணிலடங்கா இத்தனை தமிழ் நூல்களிலும் சொற்பிழை, எழுத்துப்பிழை, பொருட்பிழை என்று எதையுமே கண்டறிய முடியாத அளவிற்கு

*எழுதியிருக்கிறார்கள் என்றால் நம் தமிழ் முன்னோர்கள் எவ்வளவு செழுமையான கல்வியறிவும், இலக்கிய ஆற்றலும் பெற்றிருக்க வேண்டும், அந்த அளவிற்கு அவர்களுக்கு மேன்மையான கல்வியையும், வாழ்வியலையும் போதித்தவர்கள் எவ்வளவு பெரிய சான்றோர்களாக இருந்திருப்பார்கள்! இப்படி வேர்த்தேடிச் சென்றால் தமிழின் தொன்மையையும் சிறப்பையும் அறியமுடியும்.*

*தமிழின் உயிர்நேயம்:*

*“பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்” என்ற வள்ளுவனும், ”காக்கை குருவி எங்கள் சாதி” என்ற பாரதியும், “வாடிய பயிரை கண்டபோதெல்லாம் வாடினேன்” என்ற வள்ளலாரும், ஒரு பசு தன் கன்றை தேர்க்காலில் பறிகொடுத்து துன்புற்றதை போன்று அதை செய்த தன் மகனையும் அதே போன்று தேர்க்காலில் வதைத்து அந்த பசுவின் துன்பத்தை தானும் ஏற்று துன்புற்ற மனுநீதிச்சோழனும், முல்லைக்கொடிக்கு தேரை கொடுத்த பாரியும், குளிரால் நடுங்கும் மயிலுக்கு போர்வை தந்த பேகனும், இந்த உலகின் ஆகப்பெரிய உயிர்நேயவாதிகள். அந்த அளவிற்கு அவர்களுக்குள் உயிர்நேயத்தை போதித்தது நம்முடைய தாய்த்தமிழ் என்றால் இதைவிட வேறு என்ன பெருமை இருக்கமுடியும். அதனால் தான் தமிழ் இன்றும் உயிருக்கு இணையாக நம்மிடத்தில் போற்றப்படுகின்றது.*

*தமிழ் நூல்களின் சிறப்பியல்புகள்:*

*உலக இலக்கியங்களில் முதன்மை பெற்றவை சங்க இலக்கிய நூல்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் இன்றளவும் இலக்கிய வளத்திற்கு இன்பம் சேர்க்கின்றன. அக்காலத்தில் வாழ்ந்த தமிழ்மக்களின் அறம், கொடை, வீரம், காதல், போர்க்குணம், மாண்பு, விருந்தோம்பல் ஆகிய பண்புகளை அழகாகவும், இலக்கிய ரசனையுடனும் எடுத்துரைக்கின்றன.*

*“ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியம்” என்ற பெருமையுடைய சங்க இலக்கிய நூலான தொல்காப்பியம், பண்டைய மக்களின் வாழ்வு முறைகளையும், நாகரீகம், பழக்கவழக்கம் பண்பாட்டு விழுமியங்களை உலகிற்கு உணர்த்தும் ஒப்பற்ற நூல். தமிழின் தொன்மையான இலக்கண நூல் இதை எழுதியவர் தொல்காப்பியர்.*

*உலகப் பொதுமறையான அறநூல் திருக்குறள் 2000 ஆண்டுகளுக்கு முன்பு தெய்வப்புலவர் திருவள்ளுவரால் இயற்றப்பட்டது. அறத்துப்பால்,பொருட்பால், காமத்துப்பால் என்ற 3 பிரிவுகளும், 133 அதிகாரங்களுடன், 1330 குறள்களையும் கொண்டது. குறையே சொல்ல முடியாத அளவிற்கு ஒன்றே முக்கால் அடியில் ஏழு சீர்களை கொண்டு உலகையே அளந்திருக்கிறார் என்றால் எவ்வளவு தமிழ்ப்புலமையும், வளமான இலக்கிய ஆற்றலையும் பெற்றிருக்க வேண்டும். ஆகையால் தான் “வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு” என்று பாரதி பாடினாரோ!*

உலகில் மானுட சமூகம் பல்வேறு காரணிகளால் பிரிந்து கிடந்த காலத்தில் தமிழ் சமூகத்துக்கே உரிய மனித மாண்பிலும்,மகத்தான செருக்கிலும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற புறநானூற்று பாடலை பெருந்தன்மையுடன் எழுதியவர் கணியன் பூங்குன்றனார். இன்றைய காலத்திற்கு தேவையான ஒரு விடயத்தை 2000 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியிருக்கிறார், என்றால் எவ்வளவு தொலைநோக்கு ஞானப்பார்வை அவரிடம் அன்றே இருந்திருக்கிறது.

ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன், மூதுரை ஆகிய அறிவைப்பெருக்கும் நன்னெறி நூல்கள் அனைத்தும் அறிவு மூதாட்டி ஔவை இயற்றியவை. "அணு" என்ற வார்த்தையை 2000 ஆண்டுகளுக்கு முன்பே "அணுவைத் துளைத்தேழ் கடலை புகுத்தி குறுகதறித்த குறள்"

என்று தன் பாடலில் பயன்படுத்தி அணு பற்றிய தகவலை உலகிற்கு முதலில் கூறினார்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும், இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் எடுத்துரைக்கும் உலகின் தொன்மையான இலக்கண நூல் சிலப்பதிகாரம் அது இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது.

"போருழந்தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பன போல் மறித்துக் கைகாட்ட"

கோவலனும் கண்ணகியும் மதுரை மாநகருக்கு பொருள்தேடி நுழையும் போது அங்குள்ள கோட்டை மதிலில் கட்டப்பட்டிருந்த தோரண வாயிற்கொடிகள் காற்றில் அசைகின்றன. அந்தக் கொடிகள் அசையும் நிகழ்வு கோவலனை, நீ இங்கு வந்தால் கொல்லப்படுவாய் என்பதை முன்னமேயறிந்து வரவேண்டாம்! என்று எச்சரிப்பதாக, இயல்பாக நடக்கும் விடயத்தில் தன்குறிப்பை ஏற்றி தற்குறிப்பேற்ற அணியை அழகாக எடுத்துரைக்கிறார் இளங்கோவடிகள்.

இதையடுத்து தமிழின் சிறப்பான மணிமேகலை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி போன்ற காப்பியங்கள் ஒருங்கே ஐம்பெரும் காப்பியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இவை ஐந்தும் அறக்கருத்துக்களை போதித்து மக்களை நல்வழிப்படுத்தும் தமிழ் இலக்கிய சின்னங்கள் ஆகும். இராமாயணம், மகாபாரதம் என்ற உலகின் இருபெரும் இதிகாசங்களும் இந்த செந்தமிழில் தான்.

ஒரு சொல் அல்லது சொற்றொடர் அல்லது ஒரு பாடல் இருவேறு விதமான பொருளைத் தரும்படி அமைத்துப் பாடுவது சிலேடை என்ற இரட்டுறமொழிதல் ஆகும். இந்த சிலேடை அணியை பயன்படுத்தி காளமேகப்புலவர் பல பாடல்களைப் படி இருக்கிறார்.

தேவாரமும், திருவாசகமும், பன்னிரு திருமுறைகளும் பாடல்களை கேட்க கேட்க அமிர்தம் போன்ற திருப்புகழும் இந்த தெய்வத்தமிழில் தான்.

எந்த வித மருத்துவ வசதிகளும் இல்லாத அந்த காலங்களிலேயே தங்கள் சித்தின் மூலம் ஆராய்ந்து மூலிகைகளை வைத்து பலவகையான மருத்துவ முறைகளை கண்டறிந்து அந்த விவரங்களையும் எழுத்து வடிவில் சித்தமருத்துவ நூல்களாக தொகுத்து வைத்திருக்கின்றனர் நம் முன்னோர்கள்.

50,000 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு மூத்த குடியில் எத்தனை காவியங்கள், காப்பியங்கள், இலக்கிய, இலக்கண நூல்கள், சித்தமருத்துவ நூல்கள், மனித வாழ்வியலை நெறிப்படுத்தும் பல அறநூல்கள், இப்படி எண்ணற்ற பொக்கிசங்கள் தமிழ்மொழியில் கொட்டிக் கிடக்கின்றன. இவற்றையெல்லாம் கற்று அதன்படி வாழ்ந்தாலே போதும், நம் வாழ்வு நன்மை பெறும்.

முடிவுரை:
ஆகச்சிறந்த வரலாற்றுச்சிறப்புகளையும், எண்ணிலடங்கா சுவை நயமிக்க இலக்கியங்களையும் கொண்ட உயரிய செம்மொழி நம் தாய்மொழி என்பதில் பேரின்பம் கொள்வோம். தமிழின் தொன்மை, சங்ககால வாழ்வியல், வரலாற்று சுவடுகள் ஒவ்வொன்றையும் படித்தறியும் பொழுது ஏதோ ஒருவித நெகிழ்ச்சியும், பெருமகிழ்வும் ஆழ்மனதில் ஏற்படுகின்றது. அத்தகைய செழிப்புமிக்க, இனிமையான தமிழின் பெருமையை உணர்வோம். “இனிமைத் தமிழ்மொழி எமது எமக்கின்பந் தரும்படி வாய்த்தநல் அமுது!” என்ற பாவேந்தர் பாரதிதாசன் வரிகளின் படி தமிழை அமிழ்த்தெனக் கருதி அதன் தனித்தன்மையை போற்றி வளர்த்திடுவோம்.

—

நா. செல்வமுருகன்,
மேலவாசல், மன்னார்குடி.
மின்னஞ்சல் : selva_sm2007@hotmail.com



# யார் இவர்கள்??

அந்திம பொழுதுகளிலும் அர்த்த
ராத்திரிகளிலும் எம்மினப்
பெண்கள் சுதந்திரமாய் நடமாடும்
உறுதியைத் தந்தவர்கள்

கட்டியாண்ட குறும் நிலப்பரப்பில்
குட்டி போடும் பிரச்சனைகளை
தடுத்தே நிறுத்திய
பாரியின் வழித்தோன்றல்கள்

இளமைக் கனவுனை சுருக்கி இறுக்கி
சிறு குப்பியில் அடைத்தே
இலட்சிய பாரத்தை கழுத்தில் சுமந்த
அற்புதமானவர்கள்

தமது வாழ்வை உருக்கி உடலையே
ஆயுதமாய் செதுக்கி
எதிர்கால சந்ததியின் வாழ்வுக்காய்
அதையே தம் கைகளால் ஏந்தியவர்கள்

ஆதி இனமொன்றின் குரலாய்
அதன் அழிவின் மீட்பாளராய்
எதுவரை தியாகம் நீளுமே
அதுவரை சென்ற புனிதமானவர்கள்

மொழியை இழந்த ஓரினம் அதன்
இருப்பை இழக்கும் என்றே
வலியெனும் உளி கொண்டே
இன வரலாற்றை படைத்தவர்கள்

இரவென்றும் பகலென்றும்
மழையென்றும் வெயிலென்றும் முகங்
கோணாது
இனமொன்றின் விடுதலைக்கான வழிகள்
தேடிய நல்வழிகாட்டிகள்

உறவென்றும் உணர்வென்றும் உடல்
சோர்வென்றும் ஓய்ந்திருக்காது
விழியோடு விடுதலைச் சுடரை ஏந்தியே
அலைந்த அவதாரங்கள்

இலக்கை தகர்க்கும் கருவியாகி
தன்னையே இலக்கும் ஆக்கி
தான் கொண்ட இலட்சிய வாழ்வை
இனிதே கடந்த வீரத்துறவிகள்

யார் செய்த துரோகமோ அவ்வினத்தின்
மீதே
வீழ்ந்த சாபமோ
வலிய கரங்கள் பல இணைந்தே
கழுத்தறுத்த போதும் உயிர்ப்பானவர்கள்

வாழ்ந்த நிலம் சாம்பல் மேடாக
காத்த இனத்தின் உடல்கள் குவியலாக
இறுதிவரை தடுத்தே
இயலும் வரை காத்தவர்கள்

செத்தே மடிந்தது போக விழுப்புண்
சுமந்த இவர்கள் இன்றோ
கேட்பாரற்ற அனாதைகளாய்
கேள்விக்குறியான வாழ்வோடு இவர்கள்

சதி பின்னிய வலையில்
விதி நின்றாடிட விடமேறிய உடலோடு
நிதம் நிதம் செத்தே பிழைக்கும் இவர்கள்
வணக்கத்துக்குரிய தெய்வங்கள்

உதவிட யாருமற்றே உழலும் வாழ்வில்
உறுதியாய் இருந்த நெஞ்சில்
ஓராயிரம் வடுக்களோடு வாழும்
இவர்களோ

நாம் உதவிட வேண்டிய உடன்பிறப்புகள்.

பொது நலன் வேண்டி உழைத்தவர்களை சுயநலங் கொண்ட நாம் தலையில் வைத்து கொண்டாட வேண்டாம்.

நமக்கானவர் என்றே உபசரிப்போம்

—

ஞாரே.

---

# விழியில்லா ராகங்கள்

விழிகள் இருந்தும் இல்லாமல்,
இருப்பவர்கள் மத்தியில்...

வாழ்வில் வெற்றி அடைய,
நினைக்கும் எண்ணத்தில்...

காலங்கள் உருண்டோடும்.....

நியாயத்தின் வாசலில்,
கேள்விக்குறியாய் நிற்கும்...

வலிகளை தாங்கிடும் விழிகளில்,
கண்ணீர் வற்றிவிடும்...

விழிகளில் உண்மை...
உதட்டில் மென்மை...

எண்ணத்தில் மெய்மை...

விரைவில் இந்நிலை மாறும்?
காயங்கள் ஆறும்??
அநியாயங்கள், நியாயங்களை
மாற்றிடும்???

விழியுள்ள மனிதன்,
மனிதராய் இருந்திடும் நொடியில்...

இருள் மறைந்து
வெளிச்சம் பிறந்திடும்!!!

மனம் வானில் பறந்திடும்...

—

திருமதி. ஜெ. சி. மோனிஷா,
கோவை.

வார் முடியில் முல்லைப் பூ

உன் கார் நாற்பது கூந்தலில்
முதலில் முல்லையைச் சூடிக்கொள்

முல்லைக்கு கார்காலம் தானே
பெரும்பொழுது
முல்லையின் சிறுபொழுதையோ
சொல்லவே தேவையில்லை
முல்லையே மாலையில் மலரும்
நோய்தானே

தமிழின் நான்கு நாற்பதில்
காலம் கருதி அமைந்த நாற்பது
கார் நாற்பது
இடம் கருதி அமைந்த நாற்பது
களவழி நாற்பது
பொருள் கருதி அமைந்த நாற்பதுகள்
இன்னா நாற்பதும்
இனியவை நாற்பதும்

உரிப்பொருளை வைத்து
திணைகளைப் பட்டியல் இடும்போது
புணர்தலைக் கொண்ட குறிஞ்சியை
முதலில் வைத்த தொல்காப்பியர்
இடமும் காலமுமான
முதற்பொருளை வைத்து
திணைகளைப் பட்டியல் இடும்போது
மாயோனின் காடுறை உலகமான
முல்லையைத் தானே
முதலில் வைக்கிறார்

எனவே உன்
கார் நாற்பது கூந்தலில்
முதலில் முல்லையைச் சூடிக்கொள்.

—

மு. ஆறுமுகவிக்னேஷ்,
சத்திரப்பட்டி,
விருதுநகர் மாவட்டம்.

---

# வறுமை (சிறுகதை)

வானுயர விளம்பரப்பலகையில்
மூங்கில் சாரத்தில்
இருக்கை அமைத்து
சித்திரம் வரையும் வேலை அவனுக்கு.,

தத்ரூபமாக வரைவதில்
கை தேர்ந்தவராவர்.,
கடந்து செல்பவர்கள் கட்டாயம்
ஒரு நிமிடம் நின்று
கவனித்தே செல்வர்.

ஒருமாலையில் தொடங்கி
நடுஇரவு வரை தொடர்ந்து
வரைந்து முடித்த களைப்பில்
தன்னை மறந்து சாலையோர
நடைமேடையில் உறங்கி விட

துளி துளியாய் முகத்தில்
மழைத்துளிகள் விழ
துள்ளியெழுந்த அவனுக்கு
மனமெல்லாம் வெறுமையும்
ஏமாற்றமும் மிஞ்சின

பட்டுத்தெரிக்கும் மழைத்துளிகள்
ஓவியத்தை சிதைத்துக் கொண்டிருந்தன
கண்ணீர் மல்க

ஐயனே .. இறைவா
கருணை காட்டுங்கள் என ..
அடிமனம் வலியில் மன்றாடிய படியே
வீடு திரும்பினான்

அடுத்த நாள் ..

தொடர்ந்த சப்தம் காதில்
நுழைந்து எழுப்பின
கதவை திறந்ததும்
கூடியிருந்த ரசிகர்கள் கூட்டம்
ஓவியனுக்கு பெரும் அதிர்ச்சி
தொலைக்காட்சி நேரலைக்காக
இன்னொரு கூட்டம்

அதில் ஒரு நிருபர் கேட்டார் ;-
எப்படி உங்களால் மட்டும்
இப்படி நவீன ஓவியங்களை
படைக்க முடிகிறது .. ?!!

—

திரு. சாயிராம்,
**9443394625.**

---

# கைமாத்து படலம்

எத்தனையோ முறைகள் யார்யாரிடமோ
கடன்கேட்டுப் பெற்றவன்தான்
கொஞ்சகாலமாய் கூச்சமாக உள்ளது

கடன்கேட்டுச் செல்லும்போதே
அண்ணாந்தாளிடப்பட்டுள்ளதாக
பிரமை
ஒரு அடி உயரம் குறைந்துபோனதாக
தாழ்வு மனப்பான்மை

சாக்குப்போக்கு சொல்கிறார்கள் சிலர்
கேட்டுமுடிக்குமுன்பே மறுக்கிறார்கள்
சிலர்

தரப்போவதான பாவனையில்
கடனின் கதை கேட்டு ரசிக்கிறார்கள்
சிலர்

கடனில்லா வாழ்வு குறித்து
வகுப்பெடுக்கிறார்கள் சிலர்

பணமுடையைச் சொல்லி
நொந்துகொள்கிறார்கள் சிலர்

செலவுப் பட்டியலைச் சொல்லி
பீற்றிக் கொள்கிறார்கள் சிலர்

என்ன கெட்ட நேரமோ
வழக்கமாய் தருபவர்கள்
கைவிரித்துவிட்டனர்

மாலைக்குள் 5000 ரூ
கடன் பெற்றே தீரவேண்டும்
காரணமா கேட்கிறீர்கள்
சொல்கிறேன்
“ஒரு 1000 கைமாத்து கிடைக்குமா?”

--

செவல்குளம் செல்வராசு

# பின் வாசல் வழியே...

இளமையெனும்
கனியைக் காலமெனும்
கொடும்பசிக்காரன்
சப்பிப் போட்ட கொட்டை
முதுமை.
/
திக்குத் தெரியாத
காட்டில் இரவெல்லாம்
அடைமழை ...!
/
யார் யாரோ
ஏதேதோ வரும் கனவில்
அவள் வருவாளென்ற
நம்பிக்கையில்
நித்தம் கழிகிறது
என் நித்திரை.
/
மிதித்தவர்களில்
ஒருவர் கூட
ஐயோ பாவமென்று
நினைக்கவில்லை
சவ ஊர்வலத்தில்
சிதறிய பூக்கள்.
/
என்னைப் புரிந்து கொண்ட
கவிதையை; நான் நன்கு
தெரிந்து வைத்திருக்கிறேன்.
/
என் கனவில் வந்தவள்
விழிவாசல் வழியே
உள்நுழைந்து
கதவடைத்துக் கொள்கிறாள்.
பின்வாசல் வழியே
அறையை உற்று நோக்குகிறேன்.
பேரிருட்டு.
/
உன் சந்தேகம் மட்டுமே
வலுவிழக்கச் செய்கிறது
என்னை.
/
எனக்கான இரவை
கொடுத்து விட்டேன்
என்னுறக்கக் கனவிடம்.
உறக்கம் கலைந்த
விழிகளுடன்
பலர் விசாரிக்கத்
தொடங்கினர்
என் கனவைப்பற்றி
விசாரிப்பவர்களுக்கும்
என் கனவிற்கும்
யாதொரு தொடர்புமில்லை.
எனக்கான அக்கனவை
எப்படி விவரித்து விளக்குவேன்
எந்தத் தொடர்ப்பற்ற
அம்மனிதர்களிடத்தில்...!
/
படுத்திருக்கும் மரத்தின்
நிழலைத் தள்ளிப் போகிறது
திசைமாறும் சூரியன்.
/
நீளம் குறைவான இராத்திரியுடன்
பேசிக் கொண்டிருக்கிறேன்
வெகுநேரம்.
/
தனிமையிலிருக்கிறேன்
என்னைச் சுற்றிலும்
துளி மௌனம்கூட இல்லை.

/
நிறைய வெய்யிலோடு
வருகிறேன் பேரன்பாய்
நிழலைத் தருகிறது மரம்.
/
எரிகின்ற சூடத்தில் மட்டும்
பக்தனுக்கு அருட்பாலிக்கிறார்
ஆண்டவன்.
/
நீர் நிலம்
காற்று நெருப்பு
ஆகாயம் காலம்
எனும் ஆறு பூதங்கள்.
/
மன்னிப்பு கேள் மனிதனாக,
மன்னிப்பு கொடு
கடவுளுக்கும் மேலாக!
/
உன்னில் தொலைந்த
என்னை என்னில் தேடுவது
நியாயமில்லை.
/
ஓராமாய்ப் படுத்திருக்கும்
தாத்தாவுக்குப் பக்கத்தில்
பயனற்ற அம்மிக்கல்.
/
புற்களில் பூத்திருக்கிறது
யாரும் பறிக்க வியலாத
பனிப்பூ...!
/
தேடல் தீரும்வரை
றெக்கைகளின் வலி
தெரிவதில்லை பறவைகளுக்கு.
/
சாத்வீகமாக இருப்பது
தனிமையில் விழித்துக்கொள்கிறது
என்னுளிருக்கும் மிருகம்.
/
குளிரில் நடுங்குகிறது
ஒற்றை நிலவு.
மொத்தமாய் எரிகிறது மூங்கில் காடு.

—

கவிதைகள் ஆக்கம்
பாரியன்பன் நாகராஜன்
குடியாத்தம் - 632602
கைப்பேசி: 9443139353



# அனைத்தும் முடித்து

ஆறும்போது மட்டுமே
அமைதியை தருகிறது
கோபம்.

எண்ணங்களின் பக்குவம்
தருகிறது ஒன்றே ஒன்றை
நிதானம்

காலத்தின் கைகளில்
நடனமாடுகிறது
தீர்வு.

வேலி இல்லா தோட்டம்
அவமதிப்பில் இருக்கும்
ஆசிரியர்.

—

பார்கவி,
சென்னை.

# விழித்திரு நோயை தடுத்திடு

(விழிப்புணர்வு சிறுகதை)

எங்கு காணினும் நெகிழி பைகள்
சாலையை கடக்கையில் சாக்கடை
நாற்றம் வீதியெங்கும் தெருநாய்கள்
கூட்டம்

நம் நாட்டில் நெகிழி பையை காட்டிலும்
அதிகம் நம் கண்களில் தென்படுவது
இந்த நாப்கீன்கள் தான் ..

நான் இப்போது எதை பற்றி
பேசபோகிறேன் என்பது உங்களுக்கு
நன்றாகவே புரியும் என்று
நினைக்கிறேன்.

“நாப்கீன்” பற்றி தான் பேச
போகிறேன்...

நம் இந்தியாவில் “பிளாஸ்டிக் கவர்கள்“
காகிதங்கள், மக்காத பொருள்கள்
இதையும் தண்டி அதிகமாக
உபயோகிப்பது இந்த நாப்கீன்கள்
தான்...

நேற்று பிறந்த குழந்தைகள் முதல்
பருவமடைந்த பெண்கள்
முதல் கொண்டு நாளை இறக்க இருக்கும்
வயது முதிர்ந்தவர்கள் பெரியவர்கள்
வரை நாப்கீன் பயன்படுத்துவோர்கள்
எண்ணிக்கை

அதிகமாகிவிட்டது... நாப்கீன்
பயன்படுத்துபவர்களுக்கு
எல்லோருக்கும் நாப்கீனை
பயன்படுத்தும் முறையும் அதனால்
ஏற்படும் தொற்றுநோய்கள் குறித்தும்
அவர்கள் அறிந்திருக்கிறார்கள
இல்லையா என்பது பற்றி எனக்கு
தெரியாது...

ஆனால் இது பற்றி எல்லோரும்
கட்டாயம் தெரிந்துக் கொள்ள
வேண்டியது அவசியம்...

சாதரணமாக நம் எல்லோரும் நாப்கீனை
பயன்படுத்திவிட்டு ஒரு கருப்பு கவரில்
கட்டி சாலையோரத்தில் தூக்கி
எறிந்துவிட்டு சென்று விடுகிறோம்.
அதன்பிறகு என்ன நடக்கிறது என்பதை
பற்றியெல்லாம் இங்கே யாருக்கும் எந்த
தாய்மார்களுக்கும் கவலை இல்லை...

சாலையோரம் வீசிய நாப்கீன்களை
தெருநாய்கள் இழுத்துசென்று
பிய்த்து தெருவெங்கும் சிதறி கிடக்கிறது
இதனால் பல நோய்கள் பரவுகிறது...

பள்ளி செல்லும் குழந்தைகள்
சிறியவர்கள் பெரியவர்கள் நம்
பிள்ளைகள் என் எல்லோரும் அதே
சாலையில் தான் செல்கிறோம் என்பது
ஏன் இவர்களுக்கு புரிந்து
கொள்வதில்லை...

நீங்கள் மலத்தை மூட்டையாக கட்டி
போட்ட குப்பைதொட்டி நாற்றம்
வீசுவது உங்களுக்கு தெரியவில்லையா...

தினம்தோறும் நீங்கள் வீசும் மலத்தை (நாப்கீன்களை) அள்ளி செல்லும் துப்புரவு பணியாளர்கள் பற்றிய கவலை கொஞ்சம் கூட இவர்களுக்கு இல்லை என்பது எனக்கும் மிகவும் வருத்தமளிக்கிறது...

ஏன் இந்த அலட்ச்சியம் குப்பைகளை அள்ளி செல்வது துப்புரவு பணியாளர்கள் தானே அவர்கள் யாரோ தானே நமக்கென்ன என்ற அலட்சியமா..? அதில் வலை செய்பவர்கள் நம் பிள்ளைகலோடு பயிலும் பிள்ளைகளின் யாரோ ஒருவருடைய அம்மாவாக அப்பாவாக கூட இருக்கலாம் ஏன் நம் பக்கத்து வீட்டு பெரியோர்களாக கூட இருக்கலாம்.

அவர்களை பற்றியும் கொஞ்சம் நினைக்கலாமே...

நாம் சுத்தமாகத்தான் இருக்கிறோம் அதனால் எந்த நோயும் வரத்து என்ற அலட்சியமா? உங்களுடைய அலட்சியத்தை இதில் காட்டாதீர்கள்...

நாப்கீன்களை முறையாக பயன்படுத்திவிட்டு முறையாக குப்பைதொட்டியில் போடவும்•••

அல்லது குப்பையை ஏற்றி செல்லும் குப்பை வாகனதி போடவும். உங்கள் தெருவில் குப்பை தொட்டிகள் இல்லையா துப்புரவு பணியாளர்கள் வேலை செய்யவில்லையா அதற்கும் சில வழிமுறைகள் இருக்கிறது அதை அறிந்து செயல்படுங்கள்...

இந்த அமுதாயத்தில் வாழ்வது நாம் மட்டுமல்ல நம்மை போன்று தன மற்ற மனிதர்களும் உயிரினங்களும்...!!

உயிரை நேசிப்போம் மனிதம் வளர்ப்போம் ..
விழிப்போடு இருப்போம்

நோய் வராமல் தடுப்போம்
நம்மை நாமே காப்போம் ..!!

“வந்தபின் வாடுவதைவிட வரும்முன்னே காப்பது மேல்”
என்னும் பழமொழிக்கேற்ப
வாழ்ந்திடுவோம் ....!!

—

கவிஞர் ச. ராஜ்குமார்,
திருப்பத்தூர் மாவட்டம்.

# காதலும் காபியும் கார்காலமும்

கொட்டித் தீர்க்கும் குளிர் மழையில்
கொஞ்சிக் குழைந்திட நீயில்லை
இருண்ட மேகங்கள் சூழும் வேளையில்
சுற்றிக்கொள்ள நீயில்லை
வாடைக் காற்றில் வண்டல் மண்ணின்
வாசம் உணர்ந்து உள்ளத்தின் உணர்ச்சி
பெரு வெள்ளத்தில் மூழ்கிட நீயில்லை
எந்த புயல் மழையிலும் இசைப்புயலின்
இசையோடு இணைந்திட்டு
இம்மழையை ரசிக்க நீயில்லை
தொடுவானத்தின் தூரலில் தோழ்
சாய்ந்திட நீயில்லை.

கல்லூரிக்கு விடுமுறையாம் விடாது
மழையிலும் விடிய விடிய பேசலாம்
என்றே நம் வருங்கால கார்காலம்
பற்றியும் நாம் கரம் பற்றுவது பற்றியும்
பேசிப் பேசி பரிதவித்த பருவகாலம் அது

இன்று ....!!
மழைக்காலம் வருகிறது மழலைகளின்
உடல்நலத்தில் வருமுன் காக்க
எண்ணுகிறோம்

கருமேகங்கள் சூழ்கிறது காய்ந்த
துணிகளை எடுத்துவிட வேண்டுகிறோம்.
அடைமழைக்கு ஆடு மாடு என்ன
பண்ணும்?
விடிய விடிய பேய்கிறதே
விதைத்தது என்னவாகும்..??

கார்காலத்தில் கழனியின் நிலை பற்றி
எண்ணுகிறோம்.
மண்வாசனை மறந்து மண்அரிப்பை
எண்ணி அஞ்சுகிறோம்.

பள்ளிக்கு விடுமுறை என்றால்
பதறுகிறோம்.
இசைப்புயலை எல்லாம் மறந்து இன்று
எங்கே? என்ன..?? புயல்
உருவாகியிருக்கிறது என
உரையாடுகிறோம்.

இந்த வானம் ஏன் இப்படி
தொட்டத்திற்கெல்லாம்
மழைப்பெய்கிறது என திட்டி
தீர்க்கிறோம்.

பருவங்கள் மாறலாம்
பருவகாலங்களும் மாறலாம்
மனிதர்களும் மாறலாம்
மனித எண்ணங்களும்
மாறலாம்.
மாற்றங்கள் நிகழ்ந்தாலும்
மண்ணோடு மறவாமல் வந்து
சேர்ந்துவிடும் மழையைப்போல்
மனதோடு வந்து சேர்ந்து விடுகிறது அந்த
மழைக்கால நினைவுகள்.
ஆனாலும் அன்றும், இன்றும் மாறமல்
இருப்பது காதலும் காபியும்தான்

—

*G. சூர்யகலா சரவணன், B.E,*
கண்டிதம்பேட்டை,
மன்னார்குடி.



# மனதோடு ஒரு உரையாடல்

மாயை என்றுணர்ந்த பின்பும்
மாட மாளிகைகள் கேட்டது - மனது

நிலையில்லை என்றேதெரிந்த போதும்
போதாத வளர்வளங்களை கேட்டது - மனது

விலைமதிப்பில்லா வாழ்க்கை கையிலிருக்க
விலைப்பொருள்கள் சேர்க்கவோடி வீணிட்டது - மனது

வாழ்வின் பாதையிலே சுகமிருக்க
எதன் எல்லைத்தேடி ஓடுதோ - மனது

பேராசை தூண்டிவிட
பேதைமைத்துணையோடு
பேரின்பத்தை புறந்தள்ளி வாடுதே - மனது

உயர்ந்தவர் தாழ்ந்தவர் குணத்தாலால்ல
பணத்தால் என்றோ எடைபோடுதே - மனது

நல்வினை தீவினை பாராது
பாரினில் பணத்தாகத்தை தீர்க்குதோ - மனது

சுகமான பூமியை சுயநலத்தால்
சூறையாடுதோ சிலமானிடனின்
மாண்பற்ற - மனது

பூந்தோட்டத்தில் வாழ வழிகொடுத்தால்
பூக்களை பறித்தே எரியலாமோ - மனித மனமே

ஏனிந்த அடங்காத ஆசை
ஏழு கண்டங்களையும் அடக்குமாசை

மானிடர்களே தெளிந்து கொள்ளுங்கள்
தெரிந்தாசையைக் கொல்லுங்கள்
வாழ்வை வாழுங்கள்

மாயையால் அல்ல உயர் ஞானத்தால்!

—

இரா. ரம்யபாரதி,
புதுச்சேரி.



மா. நிரல்யா,
சிங்கப்பூர்.

# ஒரு நொடியில் பட்டாம்பூச்சி

ஒரு
பட்டாம்பூச்சியின்
வழியெல்லாம்
வண்ணங்களை
தூவிய காற்றுக்கு
அதனிடம் ஐந்து நிமிடம்
தென்றலாய் கழிக்க
நேரமில்லை....
தெரியவில்லை என்று மட்டும்
சொல்லிவிடாதீர்
முடியவில்லை
என்பதை விட
மிக கொடுமையாகிப்
போகிறது
தெரியவில்லை எனும் வார்த்தை......!

---

திரும்பி பார்க்காத கடிகாரம்:

நான்
அவ்வப்போது
எடுத்து பார்க்கும்
கைகளை அனைத்த
கடிகாரத்தில்
நேற்றையை முடிவுகளும்
இன்றைய
கனவுகளும்
நொடி முட்களாய்
நகர்கின்றன
நொடிகளாய்.....!

---

நிழல்களாகிவிடலாமா..

நிழல்களாக
இருந்து விடுகிறது
மனம்
யாரும்
மிதித்துவிடாத
ஓர் தூரத்து
இரவை தேடியும்
குழந்தை கை
மின்மினியை
நோக்கியும்....!

---

அம்மையாகிடும் அப்பன்..

அப்பன்
சொல்லிவிட்டுப்போன
அனைத்தும்
சட்டெனப்
புரிந்துவிடுகிறது
அப்பாவெனும்
அழைப்பில்
அம்மை தன்கையில்
தவழும் நேரத்தில்
அப்பன் அம்மையாகிறான்
அவ்வப்போது....!

---

புது விதை:

இருப்பவனுக்கே
கிடைத்துவிடுகிறது

எல்லாம்
அறிவு விதைத்தவன்
கைக்கட்டி நிற்கிறான்
அனைத்தும்
பணமாய் முளைத்தவன்
ஆலமரமாய் நிற்கிறான்
இந்த சமுக
வியாபாரக்காட்டில்
பொதுவியல் விதைகளை
எங்கு நட....!

---

எச்சமாகிடும் தேவை:

தேவைகள்
என்பது
உண்டுகளித்து
துப்பிவிடும்
மனித பற்களுக்கு
இடையில் ஒரு சிறுகனியாகிவிடுகிறது
பாவம்
கொடுக்கப்பட்டவன்
காக்கையின் எச்ச வடிவமாகிறான்

---

மிதிபடாத பூக்கள்

மேலே
அன்னார்ந்து பார்த்தபடி
யார் யார் கைப்பட்டு
விழ்வதும்
வாழ்வதுமான
நிலைகளை
ஒருவர் கை ஒருவர் மாற்றி
அணிந்துகொள்ளும்
அந்த இடத்திலும்
யாரோ ஒருவரின்
கைப்பட்டு
பிரிவு நிலைகளில்
உடல்கழுவும் நிலைகளிலும்
ஓயாமல் கைமாறி
கழுத்தை சேர்கிறதுV
இந்த
வார்க்கோல் கொண்டு
ஓரம் தள்ளும்
யாரோ ஒருவர் வீட்டில்
ஒதுங்கி கிடக்கும்
கைப்படாத பூக்கள்....

---

மழையாடல்

மலர் தூவிடும் வானைப்பார்த்து
சிறிதான புன்னகையுடன் நகர்கிறது
பேருந்தின் மிதிபடும் தேங்கிய நீர்..!

காலணியில் மிதிபட்ட பட்டாம்பூச்சியை
கையில் எடுத்து பார்க்கிறாள் அவள்
அவளுடன் சேர்த்து நூறு
வண்ணமாகிறது புவி..!

மழையாடலில் தேகம் நனைய
விரும்பியவள்
வானின் உயரத்தையும்
பூமியின் வலியையும் தாழாமல்
குதித்தாடுகிறாள்
தேம்பி ததும்பி கொட்டிவிடுகிறது மழை
முத்துகளாய்....!

ஒரு வீட்டில் நான்கு பெயர்
இருக்கிறார்கள் தலைகணத்தோடு
நடைபாதையில் மெல்ல
நடைபோடுகிறது

கணமென பொருட்படுத்தாது
தன்வீட்டை சுமந்தபடி நத்தை...!

மழையாடல் எனக்கு மிகவும் பிடிக்கும்
ஒருகையில் வானையும்
மறுகையில் மின்னலையும் பிடித்து
நகர்கிறேன்
காதலென துள்ளலாடி இதயத்தில்
இடிக்கிறது அவள்
சோ வென கொட்டிய துளிக்காதம்....!

ஐப்பசியில் மிதந்த வீடுகளில்
விளக்கேற்றி விளையாட நுழைகிறது
கார்த்திகை

வீடுவீடாக வாவென அழைக்க சென்ற
கார்த்திகைப் பெண்களுக்கு வயது
வந்ததும் வாசல் தாண்டிட வழியில்லை...

அறுபடைகளுக்கு ஆறு
பெண்களாயினும்
அம்மாவென அழைத்திடவில்லை
இந்த கார்த்திகேயன்....

---

பொன்னி நதி பாக்கனுமே..!

வானம் கிடுகிடுக்க சவாரி ஏந்தலில்
முந்திக்கொள்கிறான் வந்தியதேவன்
நந்தினியும் குந்தவையும்
கண்களால் காதலை காதம்
நிரப்புகின்றனர்...

பார்க்கும் இடமெல்லாம்
காதலை கடிவாளம் அவிழ்க்கும்
அவனிலை - பெண் அழகிற்கு
அடியான்...

வாள் ஏந்திய கரிகாலனும்
பெரிய சிறிய பழவேட்டரும்
பட்டம் சூழ முற்படுகையில்
பட்டைத் தீட்டுகிறாள் புத்தியை
நந்தினி-அப்பனின் குருதியில்
பழியை பழிக்கு பழியாய்
பூசிக்கொண்டு..

லங்கை வென்றாயிற்று
குழலியை கண்டாயிற்று
காடெல்லாம் பாதம் பொதிந்தாயிற்று
பொன்னியின் பெருமையெல்லாம்
ஒற்றை வாளில் நிறுத்தியாயிற்று...

பொற்பதமெல்லாம் நன்செய்
புன்செய்காளாய் பொதிந்த
தென் மண்ணில்
ஈரம் சொட்டுகளாடும்
காதையின் பொன்னி நதி
பாக்கனுமே.....!

—

கவிஞர் சே கார்கவி,
*(Er. Prof. சே. கார்த்திகேயன், ME)*
நாகப்பட்டினம்.



# வெயில்...


பட உதவி: இணையம்

கிராமபுறங்களில் சுட்டெரிக்கும் கோடைகாலத்தில் ஒரு அலாதியான சுகம் ஒன்று உண்டு. அது பிற்பகல் உறக்கம். எனக்கு நினைவிருக்கிறது 2000-2008 சரியாக 20 வருடங்களுக்கு முன் என் சிறு வயது நினைவுகள்...

சுடும் சூரியனால் உண்ட மயக்கம் தானாகவே வந்து விடும்.. மதிய உணவிற்கு பின் ஊரே உறங்குவது போன்ற ஒரு தோற்றத்தை பெற்றிருக்கும் ஒன்றிரண்டு தலைகள் மட்டும் கட கட மிதிவண்டி சத்தங்களுடன் வேகாத வெயிலில் சென்று கொண்டிருப்பார்கள் அவர்கள் ஐஸ்பெட்டிக்காரர்கள்.

அது வெயிலின் வெக்கையால் வந்த அமைதி கொஞ்சம் கசகசவெனெதான் இருக்கும்.

பேரமைதியில் கிராமத்தின் மதிய பொழுது நீண்டுகொண்டிருக்கும் கோவில் மரத்தின் நிழலில் சிலர் உறங்குவார்கள்...

எங்கோ ஒரு மூளையில் கேட்க்கும் காக்கை குருவிகளின் சப்தம் நம் தனிமையை போக்கும்.

மதியம் உணவை தயார் செய்து பரிமாறிய களைப்பபில் அம்மாக்கள் வீட்டின் பின்புற கதவுகளை திறந்து வைத்து அங்கே உறக்கத்தில் ஆழ்ந்திருப்பார்கள்...

காலையில் அவிழ்த்து விட்ட எருமை மாடுகள் மதிய வெயிலின் தாக்கம் குறைக்க குளம் குட்டைகளின் மையத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்.

அவற்றின் கொம்புகளில் காக்கைகள் ஓய்வெடுப்பதெல்லாம் கிராமங்களின் வெயில்கால வேடிக்கைகளாக இருக்கும்.

பஞ்சுமிட்டாய் விற்க வந்த தாத்தா விற்றது போக பாதி இருந்த பஞ்சு மிட்டாய் மிதிவண்டியை பேருந்து நிலையத்தின் ஓரம் நிறுத்தி விட்டு உள்ளே இருக்கும் கடப்பா கல்லில் தலை வைத்து படுத்திருப்பார்...

அவர் சட்டை பொத்தானில் முதல் மூன்றை கழட்டியவுடன் பெரு நிம்மதியை உணர்ந்ததை போன்ற முகச்சாயலை காட்டுவார்.

*பெரும்பாலான வீடுகளிள் அந்த நேரங்களில் காரைக்கால் Fm அலைவரிசை 100.3ல் 80களின் பாடல்களை முனு முனுத்தப்படியேதான் இருக்கும்.*

*இப்போதும் அந்தபாடல்கள் என் சிறுவயது கோடைக்காலத்தை நினைவுபடுத்திக் கொண்டேதான் இருக்கும்.*

*இப்படி கோடைக்கால பிற்பகல் என்பது ஒரு இயற்கையான அமைதியை கிராமம் முழுதும் தந்திருக்கும்...*

*ஆனால் நாங்கள் மட்டும் அடிக்கும் உச்சிவெயிலுக்கும் மிதிவண்டியை மிதித்துக் கொண்டு 5, 6 கிமீ தாண்டி இருக்கும் கிராமங்களில் நடக்கும் கிரிக்கெட் போட்டிக்கு சென்றுவிடுவோம்... இந்த மாதிரியான நினைவுகள் தரும் கொண்டாட மன நிலை இன்றும் வெயிலை சுமையாக காட்டுவதில்லை.*

*வயல்வெளி பம்பு செட்டுகள்...*
*சாலையோர நுங்கு மரங்கள்...*
*அறுவடையான வயலின் மத்தியில் அனல் பறக்கும் கிரிக்கெட் மைதானம்...*
*மதிய பரிட்சைக்கு செல்லும் பள்ளி மாணவர்கள்...*
*அனாதையாய் வரும் 1 மணி சிறு பேருந்து...*
*பால் ஐஸ் வாங்க காலியான பீர்பாட்டில்...*
*சேமியா ஐஸ் வாங்க கோட்டர் பாட்டில்...*
*புளியங்கொட்டைகளை சேர்த்து வைத்து கிலோ 3 ரூ விற்பது...*
*பொட்டி கடைகளில் கலர் கலராய் தொங்கும் ரஸ்னா பொடிகள்...*
*மாரியம்மன் கோவில் காவடி ஆட்டம் என கொஞ்சம் வண்ணமயமான நிகழ்வுகள் மனதில் அழியாமல் நிற்கிறது.*



*இப்படி வெயில் காலம் காவிரிப்படுகை மக்களின் வாழ்வில் நிறைய நினைவுகளை தந்திருக்கும்தான்.*

*இருந்தாலும் இந்த வெயிலுக்கு இரக்கமே இல்லைதான் என்னா... அடி.*

—

*பாலாஜி நாகராஜன்.*

# வாகன வண்மையால்

பூச்சிகளின் ரீங்காரம் மறந்துபோனது
தூதுவிடும் மலர்கள்.

ஒலி வருகிறது, ஒளி வரவில்லை
என் கவிதையில்
வித்யாரம்பம்.

என்னை இழந்தேன்
கணினி தட்டில்
கசந்த காலவெற்றி.

கூட்டுக்கும்பங்கள் தீவுக்
குடும்பங்களாக்க
பயன்படுகிறது
ஏழாம் அறிவு

வாழ   தயாராகு
உன் கனவுகளை மெய்ப்பிக்கும்
தந்தையின் தளர்நடை.

பலர் பார்க்க நானும்
வலம் வருகிறேன்
உச்சுகொட்டும் ஒப்பனையில்.

பேசிப்பேசி தேற்றுகிறேன் மனதை
ஆளுமையில்
ஆணி இரத்தம்.

முழு ஆண்மையைத் தேடினால்
முக்காலம் உணர்ந்த
முழுகன்னி.

தெரியவில்லை என்முகம்
தெளிந்த நீரில்
ஆண்ட அகவையில்.

—

விண்மீன்,
சென்னை.
*9941390563*

# அகாதம்!

காலப்பகடையில்
உருட்டப்படுகின்றன
கணக்கற்ற தலைகள்
கள்ளத்தனமாக
சிரிக்கிறார்கள்
பல சகுனிகளும்
சில கண்ணன்களும்
வஞ்சனை சூழ் உலகிதென
ஓலமிடும் வாயோரம்
ஒட்டிக்கொண்டுள்ளது
அகாத விடம்
கடமையில் கண்ணாய்
இருப்பவர்களின்
அகக்கண்களுக்கு
அகாதம் எஞ்ஞான்றும்
புலப்படுவதில்லை
அர்த்தப் புன்னகையுடன்
சுற்றிக் கொண்டிருக்கிறது பூமி!

—

பா. சிவகுமார்.

# மழை

வானத்து மழையே
கார்மேக உறவே...

இயற்கைக்கு உயிரே
பூமிக்கு வரமே...

நெருஞ்சிலும் பூத்திடும்
நெஞ்சமும் நிறைந்திடும்...

விளைச்சலும் மிகைத்திடும்
பசுமையே நிலைத்திடும்...

மண்ணுமே குளிர்ந்திடும்
மலைகளும் நனைந்திடும்...

பொழியும் இடத்திற்கு
தகுந்தது போலவே...

தன்னிலை மாறியே
தன்னையும் மாற்றிடும்...

சிப்பிக்குள் விழுந்த
மழைத் துளியோ...

முத்துக்கள் என்று
பெயரும் ஆனதே...

கடலில் விழுந்த
மழைத் துளியோ...

உப்புக்கல் என்றே
பெயரும் ஈட்டுதே...

பசுமை நிறைந்த
மழைத் துளியே...

நித்தம் புதுமைப்
படைக்க வருவாயே...

# நெகிழிக் கழிவுகள்

நெகிழிக் கழிவுகளால்
நெஞ்சமும் பதறுதப்பா...

அகிலமும் முழுமையாய்
நெகிழிக்கு மாறுதப்பா...

இயற்கையும் மறையுதப்பா
செயற்கையால் அழியுதப்பா...

மண்வளம் தேயுதப்பா
மனமெல்லாம் நோவுதப்பா...

புதுப்புது நோய்களும்
பூலோகம் வருகையிலே...

புற்றுநோய் இப்போது
புழக்கத்தில் நிறைகிறதே...

நமக்கான வாழ்வில்
நெகிழியை தவிர்த்தாலே...

வாழும் உயிர்களை
நோயின்றிக் காத்திடலாம்...

—



வாழ்வியல் கவி,
(சா. நாகூர் பிச்சை)
திண்டுக்கல்.

வியர்வையால் விளைந்தவை....!!!!

முதிர்ந்த
நினைவுகளை
முதுகில் சுமந்து கொண்டு
அலைந்து கொண்டிருக்கிறார்கள்
பூமியை வரைந்தவர்கள்

உடலால்
வீடொன்றை
வரைந்து கொடுத்துவிட்டு
உள்நுழைய மனமில்லாமல் தெருவில்
அலைந்து கொண்டிருக்கிறது உழைப்பு

தெருவோர
பிச்சைகாரனாக அலையும்
சில மனகால்களுக்கு மிதியடிகளை
கொடுத்து
நடக்க வைத்து
கொண்டிருக்கிறது காலம்

பசியென்று
கைநீட்டி கேட்கும்
சிறு குழந்தையின்
கையில் சூடு வைத்தவாறு

தொடக்கூடாத தூரத்து
கொடிகம்ப உச்சியில்
பறந்து கொண்டிருக்கிறது
தேசிய கொடி

எதிர்காலத்தை
கையில் பிடித்துக்கொண்டு
தெரு தெருவாக அலைந்து
கொண்டிருக்கிறது இளையோர்களின்
நிகழ்காலம்,

சொற்களால் மனதை
மிதித்தபடி நடந்து
முன்னேறி
போய் கொண்டிருக்கிறார்கள்
பாதைகளை வரைந்து
கொடுத்தவர்களின் பார்வையிலிருந்து
வெளியேறியபடி,

—

கவிஞர் ச.சக்தி,
அழகு பெருமாள் குப்பம்,
பண்ருட்டி.



## மகா கவி

வீச்சு அரிவாளாய்
நீ வீசிய கவிதைகளால்
துடி துடித்தது
அந்நியரின் ஆட்சி!

காணி நிலத்திற்காக மகாகாளியிடம்
வேண்டுதல் வைத்தாய்

கனவுகள் மெய்ப்பட
வேண்டுமென்றே
வேள்வித் தீயில்
வெந்தாய்!

காக்கை குருவிகளுக்காக கருணையோடு
உணவளித்தாய்!

வறுமை உன்னை

வாட்டினாலும்
புரட்சித் தீயைப்
பற்ற வைத்தாய்!

வேள்வித்தீயும்
புரட்சித்தீயும்
உன் சிந்தனையில் கொழுந்துவிட
அனல் கக்கும்
அக்னி குஞ்சுகளை
கவிதையில் வடித்தாய்!

கலகக்காரர்களை
உனது நெருப்பு விழிகளால்
ஓட ஓட விரட்டினாய்!

உனது மீசை
முறுக்களில்
எதிரிகளை மூச்சிறைக்க வைத்தாய்!

மகா கவியே!
பாமரனுக்காக
இசைத்தது
உன் பா!
சமத்துவத்திற்காக
அசைந்தது
உன் நா!

சாரதியே
என்றும்
உன் கவிதை தேரோட்டத்தில்
பயணிப்பவர்கள்
நாங்கள்!

பாரதியே
உன் எழுத்து
தோரணங்களில்
சுதந்திரமாய்
சிறகடிக்கும்
எங்கள் சிறகுகள்

மகா கவியே!
பாரதியே!
என்றும் உன்னை நேசிக்கும்
காதலி நான்!!

—

பெ. விஜயலட்சுமி,
காஞ்சிபுரம்.
6380704001



---

# 1) ஆறுதல்

யாரும்
ஏந்திக்கொள்ளாத
கரடி பொம்மையின்
மேனி முழுக்க
கோதியவாறிருக்கிறது
காற்றுச் சிறுமியின்
கைரேகைகள்!

2) இமை

கடிகாரத்தின் முள்
அசையாமலிருக்கிறது...
இழவு வீடு!

3) பாதச்சுவடு

ஊடே கடக்கும்

பட்டாம்பூச்சிக்காக
நிறுத்தியை அழுத்தும்
ஓட்டுநரின் பாதங்களுக்கு
கடவுளின் வடிவம்
பொருந்திப்போகிறது...

4) செல்லுபடியாதல்

வெட்டுப்பட்டுக்
கிடக்கும் இளநியின்
இதயக் குவியல்களில்
கசிகிறது பூமி

உயிரோடிருக்கிறோமா
அறுக்கப்பட்ட
வாழைத்தாரிற்கு
கேள்விக்குறி

பறிக்கப்பட்ட
பழங்களுக்கு
வாங்குபவர்களின்
உள்ளங்கைகளே
கிளைகள்

கிழிந்தாலும்
பயணம் வரை
செல்லுபடியாகின்றன
வாழ்வின்
உயிர் சீட்டுகள்!

—

ரகுநாத் வ,
மதுரை.

---





**N.S.சாய்ருத்ரா,**
**4ஆம் வகுப்பு,**
**ஊ.ஒ.நடுநிலை பள்ளி,**
**வடுவூர் தென்பாதி**

# காவலர்கள்

அரிவாளுக்குப் பதிலாக
இலத்தியோடு எல்லையில் நிற்கும்
அய்யனார்
காவலர்கள்!

மிடுக்கான சீருடையில்
ஊரில் பவனி வரும்
உண்மை நாயகர்கள்
காவலர்கள்

சுடும் வெயில்
இன்னொரு தொப்பி!
மின்னல் இன்னொரு லத்தி!
இரவுக் காவலில்
வான் நட்சத்திரங்கள் எல்லாம்
இயற்கை
இவர்களுக்கு அளிக்கும்
பட்டயங்கள்!
தன்னலமற்ற பணிக்காக
வானம் வாழ்த்தும் பூமழை
நீர் மழை!
இடி
ஒத்திகைக்கான முழக்கம்!

சூரியன் கூட
காலையில் வந்து
மாலையில் போகும்
சந்திரன் கூட
மாலையில் வந்து
காலையில் போகும்
காலையும் மாலையும்
கடும்பனியிலும்
சுடும் வெயிலிலும்
எப்போதும்
மக்களுக்காக
காத்துக் கொண்டிருக்கிறார்கள்
காவல் காரர்கள்!

எல்லோரும்
விடுப்பில் சென்று
மகிழ்ச்சியாக
பண்டிகையைக் கொண்டாட
இவர்கள் துறக்கிறார்கள்
விடுப்பையும்
கொண்டாட்டத்தையும்!

காவலர்கள்
ஏவலர்களல்ல...
உண்மையின் பாதுகாவலர்கள்!

எவர் காண்பர்?
காக்கிச் சட்டைக்குள்
அவர்கள் சிந்தும்
கண்ணீரையும்
செந்நீரையும்!

—

சா. கா. பாரதி ராஜா,
38-3, கைலாசநாதர் கோயில் தெரு.
பெரிய நத்தம்,
செங்கல்பட்டு - 603002.
9944315732



# வெற்றி என்ன சட்டமா?

தேர்வில் தோல்வி ஏற்பட்டபோது...
எல்லோரும் கேட்டார்கள்..!
நீ ஏன் தேர்வில் தோல்வியடைந்தாய்...!?

என் நண்பனின் நட்பு..!
முறிந்தபோது...,!
எல்லோரும் கேட்டார்கள்...?
நீ ஏன் நட்பில் தோல்வி அடைந்தாய்...!?

நான் பிரச்சனைகளால்....
விரக்தியடைந்த போது...!
எல்லோரும் கேட்டார்கள்..?

நீ ஏன் தன்னம்பிக்கையில்
தோற்றுப்போனாய்....!?

நான் என் வியாபாரத்தில்
சரிவடைந்த போது எல்லோரும்..
கேட்டார்கள்..!
நீ ஏன் சரியான வியாபார
முடிவை எடுக்கவில்லை...!?

இவர்களுக்கு எப்படி
சொல்லுவேன்...!?

எல்லோருக்கும் வெற்றி என்பது
இங்கே என்ன   சட்டமா...!?

எல்லா தோல்விகளும்..
வெற்றியின் வாசல் காட்டும்
என்பதை....!
இரவை எதிர்கொண்டால்தான்
இனிய விடியல் என்பதை...!
முட்களை நீக்கினால் தான்
அழகிய ரோஜா என்பதை...!?

இந்த விமர்சனங்களை..
என் முயற்சியின் மூலதனமாக்கி....!

தோல்விகளை வாழ்க்கை பாடமாக்கி...!
தன்னம்பிக்கையோடு..
தொடர்ந்து போராடுவேன்...!

வெற்றியின் வாசல்...
நிச்சயம் திறக்கும் எனக்கு...,!

அதுவே என்னை..
விமர்சித்தவர்களுக்கு ...!

நான் யார் என்பதை....
உணர்த்தும்...!?

—

முனைவர். சா . சம்பத்,
தேசிய பயிற்சியாளர்,
மன்னார்குடி.



# துளிப்பாக்கள்

விடாமல் பெய்கிறது
நிற்கவே இல்லை
அம்மா அப்பா சண்டை

பெயரைச் சொல்கிறேன்
பூப் பூவாய் பூக்கிறாள்
அவள்பெயர் கவிதை

மூடிய விழிகளில்
முத்தச் சத்தம்
கனவில் அவள்

வறண்ட குளத்தில்
அறங்கேறிய போட்டிகள்
விளையாடும் சிறுவர்கள்

தெருவில் குதித்து
விளையாடுகிறது
சிறுவர்களோடு மழையும்

ஆற்றில் குதித்ததும்
காப்பாற்ற ஆளில்லை
தற்கொலையில் மழை

அழையா வீட்டில்
அனுமதியின்றி நுழைகிறாள்
குடிசைக்குள் மழை

மூச்சைக் கொடுத்து
மூச்சு வாங்குகிறது
நாதஸ்வரம்

வீட்டில் தெப்பம்

நிறைவேறிய கனவு
படகோட்டும் சிறுமி

பிடித்துப் பார்க்கிறேன்
நழுவிச் செல்கிறதே
ஓ! கம்பியாய் மழை

நிலவைப் பிடித்ததும்
வீட்டிற்குள் வெளிச்சம்
ஓவியம் வரையும் சிறுமி

நிரந்தர வீட்டிற்காக
கூடு கட்டும் குருவி
பத்திரப்பதிவு அலுவலகத்தில்..!

# கவிதை

கார்மேக சாயலெடுத்து
காலை வெயில் குடித்து வந்தாய்
ஆகாய கரையோரம்
அசைந்து வரும் பூங்குயிலே..!

இருள் சாயும் பொழுதோடு
இளைப்பாறும் நிகழ்வொடு
இரவெல்லாம் விழித்திருக்கும்
இன்னிசை பூங்குயிலே..!

கண்கள் பேசிய வார்த்தைகளை
கைகளில் சுமக்கிறேன்
என்னுள் எழும் ஓசைகளை
குரலில் தடவி பார்க்கிறேன்

என்னுள்அடங்கிய ஆசைகளை
உனக்குள்ளே ஊற்றிவைத்தேன்

மெல்லன எனைபருகுவையோ?
 தாகமேற்றி செல்வாயோ?

தனிமையில் கிடத்திய
வெற்றிடங்கள் தினம் எனை
நினைவுறுத்தி வதைக்கிறதே
கோபங்கள் முளைத்தெழ
நீருற்றி கொள்கிறேன்...!

இமைமூடி இதழ் சிந்திய
ஆத்மார்த்த அன்பினை
இதய கருவறையும்
ஒலியெழுப்பி இசைக்கிறதே..!

உதட்டில் ஒட்டிய பருக்கைகள்
மொத்த முத்தங்களையும்
ஈர்த்துக் கொண்டனவோ?
இறுமாப்பாய் கிடக்கின்றனவே

நாவைத் தொட்ட விரலும் உன்
எச்சில் பட்டு விமோசனம்
பெற்றதோ? விரல் பேசப்பேச
எழுத்துகளும் வலிமை
பெறுகிறதே உன்னால்...!

பனியில் அமர்ந்தும்
நிலவில் சிரித்தும்
களவில் ஆடிய உறவாய்
கனவில் நிறுத்திவைக்கிறாய்

பூசை மலர்களும்
 கூடைக்குள்பூக்கின்றனவே
பூ வனமாய் மணக்கட்டும்....!
பூக்கும் நாட்களெல்லாம்
 உன் விரல்களின் வித்தையால்..
பூத்து சிந்தட்டும்
நம் நினைவுகளாய்...!

—

ஞா.முனிராஜ்,
அருப்புக்கோட்டை.





**ஜோதிகிருஷ்ணன்,**
**8ஆம் வகுப்பு,**
**ஊ. ஒ. நடுநிலைப்பள்ளி,**
**வடுவூர் தென்பாதி.**

# பஞ்சவர்ணம்

யாராவது "கருப்பி" என
கூப்பிட்டால் போதும்
கடுங்கோபம் அடைந்துவிடுவாள்
பஞ்சவர்ணம்.
பெயர் தான் பஞ்சவர்ணமே
தவிர நிறமோ
கருப்புதான்.
கருப்பா பொறந்தது
என் தப்பா? என முணுமுணுத்துக்
கொண்டே இருப்பாள்

அடிக்கடி அம்மாவைக்
கடிந்துக் கொள்வாள்.
மற்ற பிள்ளைகளுடன்
சேர்ந்து விளையாட
மாட்டாள். தனிமையை
விரும்புவாள்.
எப்போதும் தன் நிறத்தை
பற்றியே நினைத்துத்
தன்னைத்தானே
தாழ்த்திக்கொள்வாள்.
பள்ளி விடுமுறையில்
ஒரு நாள் தன் தாயுடன்
பக்கத்து ஊரில்
நடக்கும் கோவில்
திருவிழாவிற்கு
சென்றிருந்தாள்.

பட்டுச் சட்டையும்
பட்டுப் பாவாடையும்
முகம் முழுவதும்
பவுடர் அள்ளி அப்பிக்
கொண்டு தன் தாயின்
பின்னால் தயங்கித்
தயங்கி நடந்துச்
சென்றாள். அப்போது
எதிரில் வந்த சீத்தா
"அட என்ன பூவாத்தா
கருப்பு நிறத்தை மறைக்க இவ்வளவு
பவுடர் பூசியிருக்கா
உன் மகள்" எனக் கேட்டதும்,
பொங்கி வந்த கோபத்தை
அடக்கிக்கொண்டாள்
பஞ்சவர்ணம்.

தூரத்தில் கலர் கலரா
பலூன் பறந்துக் கொண்டு
இருந்ததைப் பார்த்த
பஞ்சவர்ணம் பலூன்
கடைக்கு ஓடினாள்.
கடைக்காரரைப் பார்த்து
சிவப்பு, மஞ்சள், நீலம்,
ஊதா, வெள்ளை என
எல்லா கலர் பலூன்களும்
உயர உயர
பறக்குது. ஆனால்
கருப்பு கலர் மட்டும்
இல்லையே.
ஏன் கருப்பு கலர்
பறக்காதா எனக்
கேட்டாள் பஞ்சவர்ணம்.

பறக்குமே. ஏன் அப்படி
கேட்கிறாய்?
பலூன் பறப்பது
வண்ணங்களால்
அல்ல. காற்று நிரப்பினால்
எல்லா வண்ண பலூன்களும் பறக்கும்
என்று கூறியதைக்
கேட்டதும்

சிந்திக்கத் தொடங்கினால்
பஞ்சவர்ணம்.

தான் ஒரு கருப்பு நிறம்
என் தாழ்வு எண்ணத்தைப்
போக்கினாள்.
தன்னைக் கருப்பி என
அழைத்தவர்கள் முன்
உயர வேண்டும்.
வாழ்க்கையில் உயர
வண்ணம் ஒரு தடையல்ல
உயர்ந்த எண்ணமே

ஒரு படிக்கல் என
கருப்பு என்ற வ(எ) ண்ண
பலூனை உயர உயர
பறக்கவிட்டாள்
பஞ்சவர்ணம்.

முற்றும்.

—

எழுத்தாளர்,
மு. ஜெரோஷா.

---

# கண்ணீர் மரம்

நீ
நடந்து சென்ற பாதையெங்கும்
மழை உழுத மண்வாசனை

எச்சரிக்கையுடன் தான் நடக்க முடிகிறது
எங்கும் வழுக்கும் தரையில்
படர்ந்த நீலப் பச்சைப்பாசி

மழலை நடையுடன் உன்
வாசல் நெருங்கி விட்டேன்

அப்பாடா!
கால வெள்ளத்தில் நீ வேருடன்
கடத்தப்பட்ட செய்தியைப்
பூட்டிய உன் கதவின்
மூடப்பட்ட வாய்
மௌனமாய் சொல்ல...

நினைவுச் சுவட்டை
ஒவ்வொன்றாய் உ...தி...ர்...த்...து...
சரிவுச்சாலையில்
ஏறிக்கொண்டேயிருந்தன...
மரத்துப்போன
என் ஒரு சோடிக் கால்கள்

வெளிறிய வானத்தில்
இப்போது
மழை துளியும் இல்லை!

ஆனாலும் விட்டுவிட்டு அழுகிறது
என் வீட்டுக் கொல்லையில்
குலைதள்ளிக் காத்திருக்கும்
வாழைமரம்.

—

அமுதாராம்,
மன்னார்குடி.



# பூமி தாய் பெற்றெடுத்த குழந்தை மரம்

இயற்கை ரம்மியமான பசுமை மனம் வீசும் காற்றுடன் கண் காணும் இடம் எல்லாம் பரந்து காணப்படும் வானம், பூமியில் பெரும்பகுதியை சூழ்ந்துள்ள சமுத்திரங்கள், கண் குளிரச் செய்யும் வனப்பு மிகுந்த இயற்கை காடுகள், அதனுள் வாழும் விலங்கு, சிறக்கடித்து உலகை சுற்றி திரியும் பறவை, சிறு சிறு வண்டிணங்களும் வண்ணத்து பூச்சியினங்கள் என இயற்கை மனம் வீசும் ரம்யமான சூழ்நிலையில் ஓர் அடர்ந்த உயர்ந்த அழகான மரம்.

இயற்கையுடன் காதல் மொழி பேசிக்கொண்டு தன் உடலை அசைத்து ஆடியப்படி பல பறைவைகளின் இருப்பிடாமகவும் கொஞ்சி விளையாடியும் மகிழ்ந்தபடி வளர்ந்து வந்தது அம்மரம்.



தன் உடல் பாகங்களில் கதிரவன் வெப்பத்தை ஏற்றுக்கொண்டு தன்னை நாடி வருபவர்க்கு குளுமையான நிழலை கொடுத்து மகிழ்ந்தது.

அம்மரம் பருவ மாற்றங்களுடன் இணைந்து தன்னையும் இயற்கையுடன் ஒன்றி மிகவும் மகிழ்ந்து வந்தது. ஓர் இயற்கை சீற்றத்தின் காரணமாக தன் உறுதி நிலையில் ஏற்பட்ட தடுமாற்றாதல் மரம் தன் உடல் பாகங்களை இழந்து காற்றின் வேகத்தில் முற்றிலும் உருகுழைந்தது.

அம்மரம் மிகவும் பரிதாபமான நிலையில் தன் உயிரையும், பாகங்களும் இழந்து என் வாழ்க்கை முடிந்தது என்று எண்ணியது.



அவ்வழியாக சென்ற ஒரு வயதான பாட்டி தனது வறுமை நிலையின் காரணமாக விறகு பொறுக்கி அதன் மூலம் வறும் வருமானத்தில் வாழ்ந்து வந்தார்.

அம்மூதாட்டி அம்மரதின் நிலையை கண்டு மகிழ்ந்தார், மரத்தின் விறகுகளை தான் வைத்திருந்த அறிவாள் கொண்டு வெட்டியும், தன் கைகளை கொண்டு உடைத்தும் அவ்விறகுகளை சிறிதாகவும் ஓர் சீராக அடிக்கியும் தன் கால்களை கொண்டு அவைகளை ஒழுங்குபடுத்தி தான் வைத்திருந்த சரடுகள் கொண்டு கட்டி தலைமீது கனத்தையும் மனதில் கனமின்றியும் விறகுகளை விற்று மகிழ்ந்து சென்றாள்.



அந்த விறகுகளை வாங்கியவர் அம்மரத்தின் நிலை அறிந்து கொண்டு தன் குலத்தொழிலின் அடுத்த நிலையை அடைய முற்பட்டு தன்னுடன் முதலையின் பற்கள் போல வலிமையுடன் கூறிய நீண்ட கையுடன் கொண்ட ரம்பம் கொண்டு



அம்மரத்தின் கையாகவும், காலாகவும் இருந்த பாகங்களை சிறு சிறு துண்டுகளாக்கி எடுத்து வந்து அதை தன் உழியை கொண்டு செதுக்கி இறையுருவங்களும், புராணக்கதைத் தொகுதிகளைக் காட்டும் சிற்பத் தொகுதிகளும், மிருகங்கள், செடி கொடிகள் ஆகியவற்றின் உருவங்களும், அதில் வண்ண அழங்காரங்கள் செய்து பிரமாண்ட ரம்மியமான கலை நயம் மிக்க தேர் ஒன்றை வடித்து மகிழ்ந்தார்.



சில நாட்கள் கடந்தன அம்மரத்தின் சருகுகள் உரமாகி புதைத்திருந்த விதைகள் முட்டி மோதி புரட்சி செய்ததில்



வெற்றியில் உயிர்தெழ செய்தது விதைகள். மர நிழலில் விளையாட வந்த குழந்தைகள் அம்மரத்தின் நிலையை கண்டு சோகம் அடைந்தனர்.

அங்கு முளைத்து இருந்த சிறு செடிகளை கொண்டு சென்று தனது வீட்டிற்க்கு அருகில் அம்மரத்தை மறுபடியும் உயிர்த்தெல செய்தனர்.

மரத்தின் பயனை அடையவும், இயற்கையை காப்பாற்றவும் மரக்கன்று நடுதல் என்ற செயல் மிகவும் முக்கியமான அழகான செயலை நாம் அனைவரும் செய்வோம். அம்மரம் மிகவும் மகிழ்ச்சியாகவும் தன் இயற்கை செழிப்புடனும் வளர்ந்தது.

வளர்ந்து மழையையும் தந்து பூமி தாயையும் குளிர்வித்து, அந்த பூமியில் விளைச்சலை செய்யும் விவசாயிகளின் மனதையும் குளிர்வித்து, உழவின் மகசூலையும் அதிகப்படுத்தியது.

இயற்கையை காப்போம் மழை நீர் பெறுவோம்...

—

கதை...

ர. கார்த்தி, DEEE,
சாத்தனூர்.

படம்...

கா. புஷ்பா, MCA,
கருக்காக்கோட்டை.

# எதிர் காலத்தை,

காயப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன,
உடைந்து நொறுங்கிய
மதுபாட்டில்கள்.!!!

************

எல்லாவற்றையும்,
சுமந்து திரிவதில்லை,
வண்ணத்துப்பூச்சி.!!!!!

**************

அழித்து விட்டு,
முன்னேறிச் சென்று
கொண்டேயிருக்கின்றன,
நவீன நெடுஞ்சாலைகள்.!!!

*************

எல்லையைத் தாண்டி,
நட்புறவு கொள்கிறது,
முல்லைக்கொடி.!!!!!

**********

பறக்க முடியாமல்,
சாலையோரத்தில் கிடக்கிறது,
பறவையின் இறகு.!!!!!

****************

எதிர் காலத்தை,
காயப்படுத்திக் கொண்டேயிருக்கின்றன,
உடைந்து நொறுங்கிய
மதுபாட்டில்கள்.!!!

************

எல்லாவற்றையும்,
சுமந்து திரிவதில்லை,
வண்ணத்துப்பூச்சி.!!!!!

**************

அழித்து விட்டு, /
முன்னேறிச் சென்று
கொண்டேயிருக்கின்றன,
நவீன நெடுஞ்சாலைகள்.!!!

*************

எல்லையைத் தாண்டி,
நட்புறவு கொள்கிறது,
முல்லைக்கொடி.!!!!!

**********

பறக்க முடியாமல்,
சாலையோரத்தில் கிடக்கிறது,
பறவையின் இறகு.!!!!!

—

அ. செல்வராஜ்.

# காதலின் ஊஞ்சல்

இரு பக்கமும் உன்னிடமே
வந்தடைகிறது
இடைப்பட்ட தூரத்தில்
நான்
என்னையே கடந்தாக வேண்டும்.

****

உன் வெளிச்சத்திற்கு ஏற்றவாறு
பிரகாசிக்கிறேன்
என் நிழலை
எங்கு கிடத்த வேண்டும் என்பதையும்
நீயே முடிவு செய்.

****

உன்னுள் இருக்கும்
புதை மணலில் சிக்கிக் கொண்டேன்
இனி
மீட்சியே வேண்டாம் எனக்கு.

****

என் கண்ணீர்க் குளத்தைச் சபித்து
விடாதே !
நீ என்னைப் பிடிக்க
நானே வலையைப் பின்னித் தருகிறேன்.

****

காதலை வணங்கும் போது
உன்னிடம் வரமும் சாபமும் பெறுகிறேன்
அது
மரணத்தின் ஒத்திகையாக இருக்கிறது.

****

என் காதலுக்கு
முற்றுப்புள்ளியையா தேடுகிறாய் ?
அதனை
பிரபஞ்சத்தின் முடிவிலியில் அல்லவா
ஒளித்து வைத்திருக்கிறேன் !

--

தி. கலையரசி.

# நட்சத்திர முட்கள்

நிதானத்தின் விரல்பிடித்து
இரைதேடும் பாம்பென
பசித்து நகர்கிறது வாழ்க்கை

மேடுபள்ளங்களைக் கடக்கப்பழகி
காலக்கிழவனின் மடிசாய்கிறது
நுரைத்துநகரும் பெருநதி

காரிருளை மெல்லக்கடக்கும்
பிறைநிலவின் பாதையில்
முட்களாய் நட்சத்திரங்கள்

மேகத்தின் திரைச்சீலையில்
அடர்த்தியாய் படிந்திருக்கிறது
பச்சையத்தின் குருதிக்கறை

இருத்தலின் முயற்சியில்
தோல்விகள் யாவற்றையும்
கழிமுகத்தின் வாயால்
விழுங்கிச் செரிக்கிறது
பேரலைகளின் படையோடு
தந்திரப் பெருங்கடல்

களித்திருந்த பறவைகளையும்
செழிந்திருந்த கிளைகளையும்
சூளையில் எரியும் மரமொன்று

நினைத்தேங்க
சூழும் புகையில்
ஒளிந்து மாயம் செய்கிறது
யாருமற்ற இரணம்.

## பறவைச்சிறார்

மாலை வெயில்
நனைகிறது மழையில்
கூடுநோக்கிப் பறந்துசெல்கின்றன
குஞ்சுகளின் நினைவில் பறவைகளும்
தாய்தந்தை நினைவில்
புத்தகப்பைச் சுமைகளோடு சிறாரும்
வழியெங்கும் சிரித்து இரசிக்கின்றன
முல்லைப்பூக்கள்.

## மரமேறும் பூனை

பகலை விழுங்கி ஜீரணித்த மகிழ்வில்
அசைவின்றிக் கிடக்கிறது
நிலவற்ற காரிருள்

பயத்தில் நடுங்கும் நட்சத்திரங்கள்
புற்களில் பனித்துளிகளாய் உதிர்கின்றன

மௌனத்தின் அடர்த்தியைப்
பள்ளிக்கூட மாணவர்களைப்போல்
அவ்வப்போது களைத்து
விளையாடுகின்றன
மனம் ஒவ்வா இராகம்பாடி
சுவர்க்கோழிகள்

பொந்திலிருக்கும்
இளங்குஞ்சின் பசியறிந்து
இரவுப்பறவையொன்று  பதற்றத்தோடு
வெளியேற

கூட்டை நெருங்குகிறது
நாவைக் குழைத்தவண்ணம்
மரமேறும் பூனை

கூடுதலாய் உழைத்த களைப்பில்
நினைவற்று உறங்குவோரின்
குருதிச்சாறு குடித்து மகிழ்கிறது
கொசுக்கள்

துணையின்றித் திரியும்
தெருநாயின் பின்னால்
இரகசியங்கள் பல
வாலாட்டித் திரிவதைச்
சிறகுசிலுப்பி கதைக்கிறது சேவல்கள்

கிழக்கின் வானம்
இளஞ்சிவப்பாய் புன்னகைக்க
துவங்குகிறது
செல்லமாய் யாவரும் வளர்க்கும்
செடிகொடிகளில்
கைநழுவிய மண்பாத்திரங்களாய்
உடையத்துவங்குகின்றன
அன்றைய நாளின் அத்தனையும்.

—

பொன். தெய்வா,
ஐவேலி.



# பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்.

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த திறவுகோல் இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த படைப்புகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் ஒண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப...
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் - சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம்பெற செய்ய...
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைபேசிக்கே மின்னிதழைப் பெற...
பகிரி: +91 8220567322

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய...

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

—

கி. மாணிக்கம்,
திறவுகோல் ஆசிரியர், குழு.